

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல்**
**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து : சமாதானத்திற்கான பணி: அன்பும் கலந்துரையாடலும் முரண்பாடுகளை எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டுமென்று**

**நவம்பர் மாத கரு : கிறிஸ்துவில் புனிதத்துவத்திற்கு அழைப்பு**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| நவ 18 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை 11.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு<br>கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா - கொடியேற்றம் |
| நவ 19 திங் | காலை 6.30<br>மாலை 7.00 | திருப்பலி (ஆ)<br>நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள்<br>கிறிஸ்து அரசர் 2 |
| நவ 20 செவ் | காலை 6.30<br>காலை 9.30<br>மாலை 7.00 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (த, ஆ)<br>நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள்<br>மூத்தோர் பணிக்குழு @ பெர். மை<br>கிறிஸ்து அரசர் 3 |
| நவ 21 புதன் | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் 4 |
| நவ 22 வியா | காலை 6.30<br>மாலை 7.00 | திருப்பலி (ஆ)<br>நவநாள்/ திருப்பலி (த) | புனித சிசிலியா<br>கிறிஸ்து அரசர் 5 |
| நவ 23 வெள் | காலை 6.30<br>மாலை 7.00 | திருப்பலி (ஆ)<br>நவநாள்/ திருப்பலி (த) | புனிதர்கள் முதலாம் கிளமென்ட் & கொலும்பன்<br>கிறிஸ்து அரசர் 6 |
| நவ 24 சனி | காலை 6.30<br>காலை 11.00<br>மாலை 4.30<br>மாலை 6.00 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (த)<br>திருமணம் (த)<br>நவநாள்/ திருப்பலி (த) | புனித ஆன்ட்ரூ டுங் லாக் தோழர்கள்<br>நெல்சன் ராஜ் த/பெ ராஜமணி & நென்சி லெட்சுமி த/பெ ராமன்<br>மரிய தாஸ் செல்வநாதன் & மெர்சி ரீத்தா அந்தோணிசாமி<br>கிறிஸ்து அரசர் 7 |
| நவ 25 ஞா | காலை 8.00<br>காலை 10.00 | திருப்பலி (ஆ, ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் பெருவிழா<br>கிறிஸ்து அரசர் பெருவிழா (சிற்றாலய திருவிழா) |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| நவ 18 ஞா | காலை 8.30<br>காலை 10.30 | பெர். மையம்<br>பெர். மையம் | மறைக்கல்வி (த) - இறுதி வகுப்பு<br>மறைக்கல்வி (ஆ) - இறுதி வகுப்பு |
| நவ 19 திங் | மாலை 7.45-9.15 | பெர். மை 2-2 | RCIA வேட்பாளர்கள் & ஆதரவாளர்கள் கூட்டம் |
| நவ 20 செவ் | காலை 8.30<br>மாலை 7.45 | பெர். மை 1-3<br>பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு<br>நற்கருணை பணியாளர்கள் கூட்டம் |
| நவ 21 புதன் | மாலை 8.00 | பெர். மை 2-3&2-5 | சீடத்துவ நிகழ்வு |
| நவ 22 வியா | மாலை 7.00<br>மாலை 7.45-9.15<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-1&2-2<br>பெர். மை 1-2 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA<br>புவிடிபா |

**2018 டிசம்பர் மாத திருமணங்கள்**

டிச 1 காலை 11.00 சடங்கு (த) அலெக்ஸ் வேளாங்கண்ணி த/பெ ஆரோக்கியசாமி & கோகிலவானி த/பெ ஞானசேகரன்
டிச 1 மதியம் 2.00 திருமணம் (த) விக்டர் ஜோர்ஜ் த/பெ ஜோசப் & டோனரீத்தா த/பெ லாசரஸ்
டிச 1 மாலை 4.30 திருமணம் (த) கிரகோரி எட்வர்ட் த/பெ சந்தனதாஸ் & ஜீயன்னா ஏன் பிரேமாவதி த/பெ ராஜேந்திரன்
டிச 8 மாலை 4.30 திருமணம் (ஆ) எட்மன் ராஜ் த/பெ வின்சென்ட் போல் & கோமதி த/பெ தர்மலிங்கம்
ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் அல்லது திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

# பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. திருவருகைக்கால சிந்தனை 2018:** ஞானிகளோடு பயணம் செய்வோம். நாள்: 2 டிச 2018 (ஞாயிறு) நேரம்: காலை 10.30 ~ மதியம் 1.00 வரை. இடம்: பெர். மையம். கிறிஸ்துமசில் ஆண்டவரை சந்திக்க இந்த திருவருகைக்காலத்தில் ஞானிகளோடு சிந்தித்து, நடப்போம் வாருங்கள்.

**2. புனிதத்தன்மையையும் இரகசியத் தன்மையையும் மீறுதல்:** அன்பார்ந்த பங்கு மக்களே, பின்வரும் தீவிரமான விஷயத்தை உங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். மக்கள் என்னை பார்க்க வந்தபோது நான் சந்தித்த சந்தர்பங்கள். ஏனென்றால் திருமணத்தில் பிரச்சனையோ அல்லது அவர்களின் அதிருப்தியை வெளிப்படுத்தவோ அல்லது அந்தரங்கமாக சில விஷயங்களை வெளிப்படுத்தவோ வருவார்கள். அவர்கள் என் பதில்களை தயார்செய்து பதிவு செய்கிறார்கள். அவர்கள் இந்த இரகசிய நடவடிக்கைகளை எனக்கு வெளிப்படுத்துவதில்லை. ஒரு குருவானவர்களுக்கும், இதைப்பற்றி தெரியாத மற்றவர்களுக்கும் இது நேர்மையையும், புனிதத் தன்மையையும் மீறிய செயலாக கருதப்படுகிறது. அனைத்து தனிப்பட்ட சந்திப்புகள், பாவசங்கீர்த்தனம் போன்ற இவையனைத்தும் அந்தரங்கமாக கருதப்படுகிறது. எனவே புனிதமானதாகும். எந்த ஒரு வழக்கிலும் பதிவு செய்வது அனுமதிக்கப்படாது. இந்த பாவம் மற்றும் தீய செயல்களை நிறுத்துங்கள்!. இந்த மீறல் நடவடிக்கையை தொடர்ந்தால் நீங்கள் தீர்மானிக்கப்படுவீர்கள். "நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் (மத் 7:2).

**3. கிறிஸ்துமஸ் மரம்:** ELF குழு கிறிஸ்துமஸ் மரம் எழுப்ப இருக்கிறார்கள். இந்த சுய நிதி திட்டம் ELF குழுவின் ஒரு முயற்சியாகும். கிறிஸ்துமஸ் மரம் ஆசீர்வதித்தல் 2 டிச 2018 (ஞாயிறு) மாலை 7.00க்கு நடைபெறும்.

**4. பங்கு மாநாட்டில் பெறப்பட்ட கருத்து:** திருமண/ அடக்க சடங்கு திருப்பலிகள் பற்றி புகார்கள் தெரிவிக்கப்பட்டது. மக்கள் தயாரிப்போடு திருப்பலிகளுக்கு, குறிப்பாக திருமணத் திருப்பலிகளுக்கு வருவதில்லை. சில சமயங்களில் முன்னோன் அல்லது வாசகர் இருப்பதில்லை. மக்கள் கைப்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர். சிலர் இருக்கைக்கு மேல் ஏறி அமர்கின்றனர். பின்புறம் சந்தடி ஏற்பட்டு சில நேரங்களில் குருவானவர் அல்லது பங்கு மக்கள் தலையிட வேண்டியுள்ளது. சூழ்நிலை கட்டுக்கடங்காமல் போகிறது.
**<u>இப்பிரச்சனைகளை நாம் எவ்வாறு தீர்க்கலாம்?</u>** இது எளிதன்று. ஆலயத்தின் வழிபாட்டிற்கும், புனிதத்தன்மைக்கும் நாம் தகுந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும். எல்லா திருப்பலிகளிலும் கைப்பேசிகளின் பயன்பாட்டிற்கு நாம் தடை விதிக்கவேண்டும். அருள்சாதன கொண்டாட்டங்களின் புனிதத்தன்மைக்கு பங்கம் ஏற்படும்போது, மீறப்படும்போது, அவமதிப்பு ஏற்படும்போது, சில ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

**5. தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்:** 26 நவ 2018 (திங்) மாலை 8.00க்கு பெர். மையத்தில் நமது பங்கு தந்தையுடன் நடைபெறும் சந்திப்பிற்கு அனைத்து 29 தொகுதி ஒருங்கிணைப்பாளர்களும் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**6. பங்கு மண்டப மறுசீரமைப்பு:** லூர்து மண்டபத்தை மேம்படுத்தி முழுமையாக மறுசீரமைப்பு செய்துவிட்டோம். இது திருமண வரவேற்பு, நிச்சயதார்த்தம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. 2019க்கான பதிவுகள் இப்போதிலிருந்து தொடங்குகிறது. பதிவு செய்வதற்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**7. கிறிஸ்துமஸ் இசை இரவு & பங்கு மண்டபம் ஆசீர்வதித்தல்:** கிறிஸ்துமசை முன்னிட்டு கிறிஸ்துமஸ் இசை இரவு நிகழ்ச்சியின் தலைப்பு "நெஞ்சுக்குள் பிறக்கவா" 22 டிச 2018 (சனி) மாலை 6.00க்கு பங்கு மண்டபத்தில் நடைபெறும் அதிஷ்ட கூப்பன்கள் ரிம 10/- (ஒரு புத்தகம்) 11 நவ 2018 ஞாயிறு முதல் திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். இந்த நிகழ்வுக்கு நிதி அளிக்க பங்கு மக்கள் தயவு செய்து கூப்பன்களை வாங்கி ஆதரவு தாருங்கள். நமது ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள் வருகை புரிந்து பங்கு மண்டபத்தை ஆசீர்வதிப்பார். வாருங்கள் ஒரு பங்கு சமூகமாக கிறிஸ்துமசை கொண்டாடுவோம்.

**8. சந்தா உறைகள்:** சந்தா உறைகளை எடுத்து பங்கிற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை 50% மக்கள் மட்டுமே செலுத்தியுள்ளபோதிலும், செலுத்தாமல் இருப்போர் தயவு செய்து உங்களின் வெறுமையான உறைகளை பங்கில் மீண்டும் ஒப்படைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விநியோகிக்கப்பட்ட பட்டியலின்படி கணக்கறிக்கை செய்ய வேண்டியுள்ளது.

**9. அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய நிலவரம்:** ஈப்போ நகராண்மைக் கழகத்திடமிருந்து சிற்றாலயம் கட்டுவதற்கான அனுமதியை நாம் பெற்றுவிட்டோம். கட்டிட வரைபட திட்டத்தை நகராண்மைக் கழக அங்கீகாரத்திற்கு நாம் சமர்ப்பிப்போம். நமது இடம், சிற்றாலயம் கட்டுவதற்கு அரசாங்க உரிமை குடியிருப்பு அரசிதழ் (கெசட்டெட்) பதிவுப் பெற்றுள்ளது. 14/9/2018ஆம் நாள் நாம் இந்த பத்திரத்தை பெற்றுக் கொண்டோம்.

**10. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 18 நவ (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**11. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி அக்டோபர் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **412,155.31** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **480,277.10** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**11/11/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - <u>RM 1,077.55</u> **காலை 9.00** - <u>RM 1,591.60</u> **தாசேக்** - <u>RM 61.25</u>
**மொத்தம்**- <u>RM 2,730.40</u> **2018** - <u>RM 560.00</u> **ஏழைகளுக்கு** - <u>RM 1,462.90</u>

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்